வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி 19.04.2025 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

ஈஸ்டர் திருவிழா, நாளை கொண்டாடப் படுவதை ஒட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்பத் துறையில் அமெரிக்காவிற்கு அளித்து வரும் ஒத்துழைப்பை, இந்தியா தொடர்ந்து அதிகரிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாட்டில், சுகாதார பாதுகாப்பிற்கு அரசு முழு ஒத்துழைப்பு அளித்து வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

இந்தியாவில் கடந்த 10 ஆண்டுகளில் மின்னணு உற்பத்தி 5 மடங்கு அதிகரித்துள்ளதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

--------------------

*முர்மு-ஈஸ்டர்* (7)

ஏசு கிறிஸ்துவின் உயிர்தெழுதலை நினைவு கூறும் ஈஸ்டர் பண்டிகை நாளை கொண்டாடப் படுவதை ஒட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இந்தியா மற்றும் வெளிநாடுகளில் வாழும்

மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்த புனித திருவிழா, தன்னலமற்ற அன்பு மற்றும் சேவையை நினைவு கூர்வதாக, அவர் தெரிவித்துள்ளார். அவரது வாழ்க்கை உண்மை, நீதி மற்றும் இரக்கத்தின் பாதையை பின்பற்ற மனிதகுலத்தை ஊக்குவிக்கிறது என்றும், அவர் கூறியுள்ளார்.

---------------------

*பிரதமர்* (11)

தொழில்நுட்பத் துறையில் அமெரிக்காவிற்கு அளித்து வரும் ஒத்துழைப்பை, இந்தியா தொடர்ந்து அதிகரிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். அவர் நேற்று டெக்ஸ்லா நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி திரு. எலன் மஸ்குடன் ஆலோசனை நடத்தினார். இதுதொடர்பாக சமூக ஊடகத்தில் பதிவிட்டுள்ள அவர், தொழில்நுட்பம் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் துறையில் ஒத்துழைப்பு குறித்து தாம் அவருடன் ஆலோசனை நடத்தியதாக தெரிவித்துள்ளார். மேலும், தாம் சமீபத்தில் அமெரிக்கா சென்றிருந்த போது எலன் மஸ்குடன் விவாதித்த விவரங்கள் குறித்தும் தற்போது ஆலோசிக்கப் பட்டதாக பிரதமர் தெரிவித்தார். அமெரிக்காவுடனான ஒத்துழைப்பை இந்தியா தொடர்ந்து அதிகரிக்கும் என்றும கூறினார்.

---------------------

*பிரதமர்-சவுதி (10)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசரும், பிரதமருமான முகமது பின் சல்மானின் அழைப்பின் பேரில் 2 நாள் பயணமாக வரும் செவ்வாய்க் கிழமை சவுதி அரேபியாவிற்கு செல்ல உள்ளார். கடந்த 2016 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில், பிரதமர் மேற்கொண்ட பயணத்திற்கு பிறகு, இது பிரதமர் சவுதி அரேபியாவிற்கு மேற்கொள்ளும் 3ஆவது பயணமாகும் என்று வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவும், சவுதி அரேபியாவும், சமூக, கலாச்சார, மற்றும், வர்த்தக கூட்டாண்மையில் முக்கிய நட்பு நாடுகளாக இருந்து வருகிறது. இருநாடுகளும், அரசியல், பாதுகாப்பு, வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, தொழில்நுட்பம், சுகாதாரம், கல்வி உள்ளிட்ட துறைகளில் பல்வேறு இருதரப்பு உறவுகளை பகிர்ந்து கொள்கின்றன.

---------------------

*பிரதமர் (7)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இம்மாதம் 21ஆம் தேதி குடிமைப் பணிகள் தினத்தை ஒட்டி, குடிமைப் பணியாளர்களிடையே உரையாற்ற உள்ளார். நிகழ்ச்சியில் பொது நிர்வாகத்தில் சிறந்த விளங்கியதற்கான பிரதமரின் விருதுகளையும் அவர் வழங்க உள்ளார். இந்த ஆண்டு மாவட்டங்களின் முழுமையான மேம்பாடு, லட்சியத் தொகுதிகள் திட்டம், மற்றும், புதுமை ஆகிய பிரிவுகளில் 16 விருதுகள் பிரதமரால் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட உள்ளது.

---------------------

*நட்டா (8)*

மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு. ஜே.பி நட்டா, அனைவரையும் நாம் உண்ணக் கூடிய உணவில் எண்ணெய் பொருட்களை 10 சதவிகிதம் குறைத்து ஆரோக்கிய வாழ்வு வாழுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். திரு. நட்டாவின் இந்த சமூக ஊடகப் பதிவிற்கு பதில் அளித்த பிரதமர் திரு. நரேந்திர மோடி, இந்த முயற்சியை உலக கல்லீரல் தினத்தை குறிக்கும் ஒரு பாராட்டத்தக்க முயற்சி என்றும், உடல் பருமன் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த, அனைவரும் ஆரோக்கிய இந்தியா இயக்கத்தில் சேர்ந்து பயன் பெறுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

---------------------

*அமித் ஷா (15)*

நாட்டில், சுகாதார பாதுகாப்பிற்கு அரசு முழு ஒத்துழைப்பு அளித்து வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார். உலக கல்லீரல் தினத்தை முன்னிட்டு, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற கல்லீரல் மற்றும் பிலியரி அறிவியல் நிறுவனம் ஏற்பாடு செய்த, ஆரோக்கியமான கல்லீரல்-ஆரோக்கியமான இந்தியா என்ற நிகழ்ச்சியில் அவர் இன்று உரையாற்றினார். பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையின் கீழ், சுதாதார உட்கட்டமைப்பு கடந்த 11 ஆண்டுகளில், குறிப்பிடத்தக்க வளர்ச்சியை கண்டுள்ளதாக அவர் தெரிவித்தார். கடந்த 2014ஆம் ஆண்டு, மத்திய பட்ஜெட்டில் சுகாதாரத்திற்கு 37ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டதாகவும், இது தற்போது, 1 லட்சத்து 27

ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார். இதேபோல் கடந்த 2014ஆம் ஆண்டு இந்தியாவில் 7 எய்ம்ஸ் மருத்துவமனைகள் மட்டுமே இருந்தது என்றும், இது தற்போது 23 ஆக அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை, 387 -ல் இருந்து 780 ஆக அதிகரித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

---------------------

*கல்லீரல் 1 (3)*

உலக கல்லீரல் தினம், ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 19ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டிற்க்கான கருப்பொருள், உணவே மருந்து என்பதாகும். இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு...

**(வாய்ஸ்)**

*கல்லீரல் 2 (15)*

**(வாய்ஸ்)**

கல்லீரல் ஆரோக்கியம் மற்றும் தடுப்பு, பராமரிப்பின் முக்கியத்துவம் ஆகியவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் உலக கல்லீரல் தினம் அனுசரிக்கப் படுகிறது. ரத்தத்தில் உள்ள நச்சு நீக்குதல் மற்றும் செரிமானத்திற்கு உதவுதல், மற்றும் ஊட்டச் சத்துக்களை சேமித்தல், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்தல் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்ட அத்தியாவசிய செயல்பாடுகளில் கல்லீரல் முக்கிய பங்கு வகிக்கிறது. 1.5 பில்லியன் மக்கள் நாள்பட்ட கல்லீரல் நோயால்

பாதிக்கப் பட்டுள்ளதாக ஆய்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. மேலும், கல்லீரல் நோய், மரணத்திற்கு ஒரு முக்கிய காரணமாகவும், இதனால் ஆண்டுதோறும் 2 மில்லியன் மக்கள் மரணமடைவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மது அருந்துதல், மோசமான உணவு முறைகள், மற்றும், கொழுப்பு போன்ற காரணங்களால் கல்லீரல் நோய் ஏற்படுவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. பழங்கள், காய்கறிகள், முழு தானியங்கள் மற்றும் புரதங்கள் நிறைந்த உணவுகள் நோயை தடுக்க உதவுகிறது, மற்றும் கல்லீரல் செயல்பாட்டை அதிகரிக்கிறது.

---------------------

*ராஜ்நாத் சிங்* (13)

வரும் 2030ஆம் ஆண்டிற்குள், இந்தியாவின் ராணுவ தளவாட ஏற்றுமதி 50 ஆயிரம் கோடி ரூபாயை எட்டும் என்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார். மஹாராஷ்ட்ர மாநிலத்தில் தொழில் கூட்டமைப்பு சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த நிகழ்ச்சி ஒன்றில் அவர் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது பாதுகாப்புத் துறையில் மத்திய அரசின் பல்வேறு சாதனைகளை அவர் எடுத்துரைத்தார். ராணுவ தளவாட ஏற்றுமதி, பாஜக தலைமையிலான ஆட்சியில் 40 சதவிகிதம் அதிகரித்துள்ளதாகஅவர் தெரிவித்தார். கடந்த 2014ஆம் ஆண்டு 600 கோடி ரூபாயாக இருந்த ராணுவ தளவாட ஏற்றுமதி, தற்போது 24 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் ராஜஸ்தான் மாநில ஆளுநர் திரு. ஹரிபாவ் பாக்டே மற்றும் மஹாராஷ்ட்ர மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர பட்நாவிஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

---------------------

*மக்களவை துணைத் தலைவர்* (11)

நாட்டின் கலாச்சாரம், பண்பாடு, பாரம்பரியம், ஆன்மீகம் ஆகியவற்றை பாதுகாக்கும் முயற்சியில், பிரதமர் திரு. நரேந்திர மோடி ஈடுபட்டு வருவதாக, மக்களைவைத் துணைத் தலைவர் திரு. ஹரிவன்ஷ் தெரிவித்துள்ளார். பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஆற்றிய பல்வேறு உரைகளின் தொகுப்பான சமஸ்கிருத கா பஞ்சவ அத்யாய் என்ற புத்தக வெளியீட்டு விழாவிற்கு தலைமையேற்று பேசிய அவர், இந்த புத்தகம் கலாச்சாரத்தை பாதுகாக்க, பிரதமர் திரு. நரேந்திர மோடி கொண்டு வந்த தீர்மானத்தை பிரதிபலிப்பதாகதெரிவித்தார். மேலும், பழமை வாய்ந்த பண்பாட்டை, அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்லும் பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையை வெளிப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

---------------------

*அமித் ஷா – நக்சல்* (9)

அடுத்த ஆண்டு மார்ச் 31ஆம் தேதிக்குள், நாட்டில் நக்சல் தீவிரவாதத்தை முற்றிலும் ஒழிக்க மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார். சத்தீஸ்கர்

மாநிலத்தில் 9 பெண்கள் உட்பட 33 மாவோயிஸ்டுகள் ஆயுதங்களை கைவிட்டு சரணடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார். அம்மாநிலத்தில் சுக்மா மாவட்டத்தில் மூத்த பாதுகாப்புத் துறை அதிகாரிகள் முன்னிலையில் மாவோயிஸ்டுகள் நேற்று சரணடைந்தனர். இவர்களுக்கு 40 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பரிசுகள் வழங்கப்பட்டன. பாதுகாப்புத் துறை அதிகாரிகளின் நடவடிக்கைக்கு அமைச்சர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

---------------------

*அஷ்வினி வைஷ்ணவ் (9)*

இந்தியாவில் கடந்த 10 ஆண்டுகளில் மின்னணு உற்பத்தி 5 மடங்கு அதிகரித்துள்ளதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். அரியானாவின் குருகிராமில், செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் கீழ், மின்னணு உற்பத்தித் துறையில், பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார். கடந்த 10 ஆண்டுகளில், மின்னணு ஏற்றுமதி 6 மடங்கு அதிகரித்து, 3 லட்சத்து 25 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டி உள்ளது என்றும் அவர் கூறினார். இத்துறையில், 25 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப் பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

---------------------

*ஷிவ்ராஜ் சிங் சவுகான்* (14)

சிறு விவசாயிகள் பாதுகாப்பு உறுதி செய்யப்படாத வரை, உலகளாவிய உணவுப் பாதுகாப்பு இலக்குகளை எட்டுவது சாத்தியமில்லை என, மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார். பிரேசிலில் நேற்று நடைபெற்ற பிரிக்ஸ் நாடுகளின் வேளாண் அமைச்சர்கள் கூட்டத்தில் அவர், இந்தியா சார்பில் பங்கேற்று பேசினார். உலகளாவிய வேளாண் உத்திகளுக்கு ஏற்ப, சிறு மற்றும் குறு விவசாயிகளின் நலனுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார். இந்தியாவை பொருத்தவரை விவசாயம் வெறும் பொருளாதார நடவடிக்கை மட்டுமல்லாமல், கோடிக்கணக்கான குடும்பங்களுக்கு வாழ்வாதாரம் என்றும் அவர் தெரிவித்தார். உலகின் 510 மில்லியன் சிறு விவசாயிகள், உலகளாவிய உணவு முறையின் முதுகெலும்பாக உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். காலநிலை மாற்றம், விலை ஏற்ற இறக்கம், மற்றும் வளப் பற்றாக்குறையால் அவர்கள் மிகவும் பாதிக்கப் படுபவர்களாக உள்ளனர் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

---------------------

*யுபிஐ* (9)

2 ஆயிரம் ரூபாய்க்கும் அதிகமாக மேற்கொள்ளப்படும் யுபிஐ பணப் பரிவர்த்தனைக்கு ஜிஎஸ்டி வரி விதிக்க பரிசீலனை செய்வதாக வெளியான தகவல், அடிப்படை ஆதாரமற்றவை என மத்திய நிதியமைச்சகம்

தெரிவித்துள்ளது. இதுகுறித்து நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், யுபிஐ பணப் பரிவர்த்தனைக்கு ஜிஎஸ்டி வரி விதிக்கும் திட்டம் ஏதும் மத்திய அரசிடம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வியாபாரிகளுக்கான கட்டணத்திற்கும் கடந்த 2020ஆம் ஆண்டு முதல் மத்திய நேரடி வரிகள் வாரியம் விலக்கு அளித்து இருப்பதாக, அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---------------------

*ஆர்யபட்டா* (10)

இந்தியாவின் முதல் செயற்கைக் கோளான ஆர்யபட்டா, விண்ணில் செலுத்தப்பட்டு இன்றுடன் 50 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. 1975ஆம் ஆண்டு இதே நாளில், ஆர்யபட்டா விண்ணில் செலுத்தப்பட்டது. இந்த செயற்கைக் கோளுக்கு, பண்டைய இந்திய கணிதவியலாளர் மற்றும் வானியலாளர் ஆர்யபட்டாவின் பெயர் வைக்கப்பட்டது. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தால் கட்டமைக்கப்பட்ட இந்த செயற்கைக் கோள் சோவியத் ஒன்றியத்தின் உதவியுடன் விண்ணில் செலுத்தப்பட்டது. சூரிய இயற்பியல், விண்வெளி மற்றும் எக்ஸ் கதிர், வானியல் உள்ளிட்ட பகுதிகளை ஆராய்வதே இந்த செயற்கைக் கோளின் நோக்கமாக வரையறுக்கப்பட்டது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

ஈஸ்டர் திருவிழா, நாளை கொண்டாடப் படுவதை ஒட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்பத் துறையில் அமெரிக்காவிற்கு அளித்து வரும் ஒத்துழைப்பை, இந்தியா தொடர்ந்து அதிகரிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாட்டில், சுகாதார பாதுகாப்பிற்கு அரசு முழு ஒத்துழைப்பு அளித்து வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

இந்தியாவில் கடந்த 10 ஆண்டுகளில் மின்னணு உற்பத்தி 5 மடங்கு அதிகரித்துள்ளதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**